1979 மார்ச் 13]

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், ஒப்பந்தம் படிப்பதற்கு ரொம்ப அழகாக இருக்கிறது. வருஷம் ஒன்றுக்குக் கூலி உயர்வு கிடைக்கிறது. 'டிரஸ்' கிடைக்கிறது என்றெல்லாம் இருக்கிறது. அந்தத் தொழில் திடீர், திடீரென்று செத்துப் பிழைக்கக்கூடிய அளவு இருக்கிறது. அந்த நிலைமையிலே 2, 3 மாதம் மூடப்படு கிறது. மறுபடியும் திறக்கப்படுகிறது. ஆகவே, 'பெர்மனன்ட்' தொழிலாளி இல்லையாதலால் உனக்கு இந்தச் சலுகையெல்லாம் கிடையாது என்ற சூழ்நிலை இருப்பது கனம் அமைச்சருக்கு நன்றாகத் தெரியும்—தெரியுமா (சிரிப்பு). ஆகவே, விஷயத் திலே கனம் அமைச்சரவர்கள் இந்த ஒப்பந்தத்தின்படி இந்தச் சலுகையெல்லாம் கிடைப்பதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்கள்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மூலக்கேள்வி. ஊதியத்தைப் பொறுத்தது, ஒப்பந்தத்தைப் பொறுத்தது.

[முற்பகல் 9.50]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 373, 374 இரண்டும் அமைச்சர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க தள்ளிவைக்கப்பட்டது.

ஆயக்கட்டு ஆலோசனைக் குழுக்கள்.

* வினா எண் 375—திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஆயக்கட்டு ஆலோசனைக் குழுக்கள் அமைக்கத் திட்டமுள்ளதா?

(ஆ) காவிரியாற்றுப் பாசனப் பகுதிக்கும் கல்லணை விரிவாக்கக் கால்வாய் பாசனப் பகுதிக்கும் இக்குழுக்கள் அமைக்கப்பட உள்ளனவா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: (அ) & (ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயக்கட்டு ஆலோசனைக் குழுக்கள் என்பது மிகவும் முக்கியமானது. முறையாகப் பாசனம் பெற்றதால்தான் நல்ல முறையிலே விளையும் என்கிற அடிப்படையில் காவிரியாற்றுப் பாசன பகுதிக்கும், கல்லணை விரிவாக்கக் கால்வாய் பாசனப் பகுதிக்கும், இதை பரிசீலிக்கிறோம் என்று சொல்லப்பட்டது, துரிதமாக ஆயக்கட்டு ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட வேண்டும், அதற்கு அரசு முயற்சி செய்யுமா? எந்த அடிப் படையில் அந்தக் குழுக்கள் அமைக்கப்படும்? சர்வகட்சி முறையில் எல்லாக் கட்சிகளுக்கும் சரியான அளவு பிரதிநிதித்துவம் கொடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, ஆயக்கட்டு பகுதிகளிலே குறிப்பாக, காவிரியாற்றுப் பாசன பகுதி, பரம்பிக்குளம்—ஆளியாறு பாசனப் பகுதி, பெரியாறு, வைகை பாசனப் பகுதி போன்றவைகளை முன்னால் வைத்து அவைகளுக்கு ஆயக்கட்டு ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்படவிருக்கிறது. அதற்காக அவைகளைப் பாசன பிரிவு நதிப் பிரதேசமாகப் பிரித்து பின்னர் ஆயக்கட்டு ஆலோசனைக் குழுக்களை அமைத்தால் நன்றாக இருக்கும் என்று அரசு பரிசீலனை செய்து கொண்டு இருக்கிறது. அவைகள் மீண்டும் மானியக் கோரிக்கைகள் வருகின்ற நேரத்திற்குள் முடித்துத் தரவேண்டும் என்கின்ற அடிப்படையிலே வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

திரு. எம். ஏ. லத்தீப் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆயக்கட்டு ஆலோசனைக் குழு என்று அமைக்கப்படுவது காவிரி போன்ற ஜீவநதி ஆற்றுப் பகுதிகளுக்கு மட்டுமா அல்லது கிணறுகள், ஏரிகள், பாசனத்திற்கு உபயோகப்படும் கிணறுகள், ஏரிகளுக்கு தனியார் ஆயக்கட்டு உரிமையாளர் களுக்கும் இத்தகைய ஆயக்கட்டு அமைக்கப்படுமா என்பதை அமைச்சர் அறிவிக்க முடியுமா? அப்படி அமைக்காவிட்டால் எல்லா இடங்களுக்கும் இந்த ஆலோசனைக் குழுக்கள் அமைத்து பரிசீலனை செய்ய முடியுமா என்பதையும் அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்றுப்பாசனப் பகுதிகளை மையமாக வைத்துத் தான் இத்தகைய ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்படுகின்றன. அந்த ஆலோசனை குழுக்களில் சர்வ கட்சித் தோழர்களும் இடம் பெறுகின்ற முறையிலே அமைக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 376.

திரு. மு. அம்பிகாபதி : தயவுசெய்து இன்னொரு கேள்வி சார், தண்ணீர் விஷயமாச்சே.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த கேள்வியை ஆரம்பித்தாயிற்றே. தனிக் கேள்வியாகப் போடுங்கள். பிறகு, வைத்துக் கொள்ளலாம்.

ஆழியாறு நீரைப் பயன்படுத்தல்.

*வினா எண் 376 திரு. ரா. அய்யாச்சாமி : மாண்புமிகு வேளாண்மை பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) கோவை மாவட்டம் ஆழியாறு அணையின் கொள்ளளவு குறைவாக இருப்பதால் அதிகமான தண்ணீர் கடலிலே போய் வீணாகக் கலப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதைத் தடுக்க மீண்டும் ஒரு அணை கட்டும் உத்தேசம் உள்ளதா?